## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

# CC No.25/2020

2020-ம் ஆண்டு நவம்பர் மாதம் 03-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 1 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | வயது | |
| தகப்பனார் பெயர் | பக்கிரிசாமி | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் கடுவன்குடி காலனி தெருவில் வசித்து வந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். திருவாரூர் துர்க்காலயா ரோட்டில் எதிரி சக்திவேல் இயற்கை அங்காடி கடை நடத்தி வருகிறார். என் குழந்தைகளுக்கு இயற்கை உணவு பொருட்கள் வாங்கி கொடுப்பதற்காக அவரது கடைக்கு செல்வேன். பலதடவை நான் அப்படி சென்று வந்தேன். அப்போது என்னிடம் நீ என்ன வேலை செய்கிறாய் என்று கேட்டார். நான் விவசாய வேலை பார்ப்பதாக சொன்னேன். நான் என்ன படித்துள்ளேன் என்று கேட்டார். நான் 12 வது வரை படித்து விட்டு வேலை தேடி வருகிறேன் என்று சொன்னேன். அப்போது என்னிடம் கோர்ட்டில் வேக்கன்ஸி இருக்கு நான் வேலை வாங்கி தருகிறேன் என்று சொன்னார். நான் கோர்ட்டில் என்ன வேலை என்று கேட்டேன். அதற்கு அவர் அலுவலக உதவியாளர் வேலை வாங்கி தருகிறேன் என்று சொன்னார். அப்போது அவர் 7 , 8 வேக்ன்ஸி இருக்கு எனக்கு தெரிந்தவர்கள் இருந்தாலும் சொல்லும்படி சொன்னார். என்னிடம் சொன்ன அன்றே மேற்படி வேலைக்கு 2 1/2 லட்சம் ஆகும் என்றும் முதலில் 1 லட்சம் கொடுக்க வேண்டும் என்றும், அதன்பிறகு வேலை கிடைத்து, ஆர்டர் வந்தவுடன் மீதி 1 1/2 லட்சத்தை கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார். பிப்ரவரி மாதம் 2018-ல் சென்று இன்னும் வேலை வாங்கி தரவில்லையே, மூன்று மாதத்தில் வேலை கிடைத்துவிடும் என்று

சொன்னீங்களே என்று கேட்டேன். அப்போது சக்திவேல் ஜுன் மாதத்தில் வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார். ஜுன் மாதமும் வேலை கிடைக்கவில்லை. அதனால் மீண்டும் சென்று கேட்டேன். மே மாதம் கோர்ட் லிவு என்றும், அதன்பிறகு 6 மாதத்திற்குள் வேலை கிடைத்துவிடும் என்றும், இல்லையென்றால் வாங்கிய பணத்தை திருப்பி தந்துவிடுவதாகவும் சொன்னார். அவர் சொன்னபடி வேலை வாங்கி தரவே இல்லை. நான் மீண்டும் சென்று கேட்டேன். அப்போது அவர் பணத்தை வாங்கி நான் வைத்துக்கொள்ளவில்லை, இவரிடம் கொடுத்துவிட்டேன் என்று கோவிந்தலெட்சுமியை என்னிடம் காட்டினார். கோவிந்தலெட்சுமி யார் என்று இதுவரை என்னிடம் சொல்லவில்லையே, அவர் யார் என்று நான் அவரிடம் கேட்டேன். அதற்கு சக்திவேல் கோவிந்தலெட்சுமி அவருடைய சொந்த காலனியில் குடியிருப்பதாகவும் கூறினார். அவர் வீட்டிற்கு கோவிந்த லெட்சுமியை அழைத்து வந்துதான் எனக்கு அறிமுகம் செய்தார். என்னிடம் சக்திவேல் வாங்கிய பணத்திற்கு நான் உத்தரவாதம் என்று கோவிந்தலெட்சுமி என்னிடம் சொன்னார். அதன்பிறகு நான் சக்திவேலுவிடம் நேரடியாகவும், அவர் என்னிடம் கொடுத்த அவரது போன் நம்பரிலும் தொடர்பு கொண்டு கேட்டேன். அவர் பதில் சொல்லவில்லை. அதனால் மீண்டும் நான் நேரடியாக சொன்று சக்திவேலிடம் கேட்டபோது என்னை ஒரு பத்திரம் வாங்கி வரும்படியும், அதில் பணத்திற்கு உத்தரவாதம் செய்து எழுதி தருவதாகவும் சொன்னார். நான் பத்திரம் வாங்கி வந்து அவர்களிடம் கொடுத்தேன். அவர்கள் இருவரும் அதில் எழுதி கையெழுத்து போட்டு கொடுத்தார்கள். மீண்டும் அவர்களிடம் நான் கேட்டபோது அவர்கள் பதில் சொல்லவில்லை. என்னிடம் மேற்படி பத்திரத்தை 5 பேருக்காக அதாவது எனக்காகவும், அழகர், தாசன், சுரேஷ், தர்மராஜ், தினேஷ் ஆகிய 5 பேர்களுக்காவும் எழுதி கொடுத்தார். மேற்படி 5 நபர்களும் தனித்தனியாக உத்தரவாதம் கேட்டதால் அவர்களுக்கு தனியாகவும் சக்திவேல் பத்திரம் எழுதி கொடுத்தார். ஆனால் எங்களுக்கு வேலையோ, பணமோ கொடுக்கவில்லை. இந்த நிலையில் சக்திவேல் போலிசில் புகார் கொடுத்தார். அதில் பணத்தை வாங்கி அவர் வைத்துக்கொள்ளவில்லை என்றும், கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்துவிட்டதாகவும் கூறியிருந்தார். போலிசார் அவர் கொடுத்த புகாரின்பேரில் என்னையும் விசாரித்தார்கள். போலிசார் விசாரித்தபோது நான் சக்திவேலிடம் பணம் கொடுத்து ஏமாந்துவிட்டதாக புகார் அளித்தேன். பணத்தை நான் இதுவரையில் அவரிடமிருந்து வாங்கவில்லை. நான் எனக்காக ரூ.1,00,000-மும் மற்ற 6 நபர்கள் அழகர், தாசன், தர்மராஜ், சக்திவேல், தினேஷ்

ஆகியோர்களுக்காக தனித்தனியே ரூ.1,00,000-மும் கொடுத்திருந்தேன். அதில் சக்திவேலுக்கு டி.என்.சி.எஸ்.சி-யில் வேலை கிடைத்துவிட்டதால் அவரது பணத்தை எதிரி சக்திவேலிடமிருந்து வாங்கி கொடுத்துவிட்டேன். அந்த தொகை ரூ.1,00,000 ஆகும். மீதி ரூ.6 லட்சம் இதுவரையில் பெறமுடியவில்லை. மேற்படி தொகையை சென்னை, கும்பகோணம், திருவாரூர், மன்னார்குடி ஆகிய ஊர்களில் உள்ள நீதிமன்றங்களில் வேலை வாங்கி தருவதாகத்தான் சொல்லி வாங்கினார். இது சம்பந்தமாக நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என் கையொப்பத்துடன் கூடிய புகார் மனு **அ.த.சா.ஆ.1** ஆகும். 01.03.2019 ம் தேதியில் எதிரி சக்திவேல் என்னிடம் வாங்கிய பணத்தை திருப்பி தருவதாக எழுதி கொடுத்த பத்திரம் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். மேற்படி பத்திரத்தில் சாட்சிகளாக அழகர் மற்றும் என் நண்பர் சக்திவேல் ஆகியோர் கையெழுத்து செய்தார்கள். அதில் எதிரி சக்திவேலும் கையெழுத்து செய்தார். அந்த பத்திரம் **அ.த.சா.ஆ.2** ஆகும். 04.02.2019 ம் தேதியன்று எதிரி சக்திவேலும், எதிரி கோவிந்தலெட்சுமியும் கூட்டாக சேர்ந்து என்னையும் உள்ளிட்ட ஏழு நபர்களுக்கும் வேலை வாங்கி தருவதாகவும், இல்லையென்றால் வாங்கிய பணத்தை 04.03.2019 ம் தேதியன்று திருப்பி தந்துவிடுவதாகவும் கூறி பத்திரம் எழுதி கொடுத்தார்கள். அதில் எதிரிகள் இருவரும் கையெழுத்து செய்து கொடுத்தார்கள். மேற்படி ஆவணத்தை எதிரி சக்திவேல் வீட்டில் வைத்து எழுதி எதிரிகள் இருவரும் கையெழுத்து செய்து கொடுத்தார்கள். அந்த பத்திரம் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அது **அ.த.சா.ஆ.3** ஆகும். ( மேற்படி பத்திரத்தில் உள்ள கையொப்பம் 2 ம் எதிரியின் கையொப்பம் அல்ல என்ற 2 ம் எதிரி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது ). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1 வது எதிரி தரப்பில்)**

எதிரி ஆஜரில் இருந்தும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் நீதிமன்றம் கேட்டுக்கொண்டும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை என்பதால் குறுக்குவிசாரணை முடிக்கப்படுகிறது.

கு.வி. (2 வது எதிரி தரப்பில்)

1வது எதிரி சொல்லும்வரையில் 2 வது எதிரி 1வது எதிரிக்கு சொந்தமான காலனியில் குடியிருக்கும் விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2 வது எதிரி எந்த கதவிலக்கத்தில் குடியிருந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் 2 வது எதிரி திருவாரூர், பவித்திரமாணிக்கத்தில் உள்ள பழைய வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் கதவிலக்க எண்.24/2-ல் வசித்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் 1வது எதிரி 2 வது எதிரியை 1வது எதிரியின் வீட்டில் குடியிருப்பதாக சொல்லிதான் எனக்கு அறிமுகம் செய்தார். வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் இருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. 2 வது எதிரி எந்த காலகட்டத்திலும் 1வது எதிரியின் காலனியில் குடியிருக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு நேரடியாக தெரியாது. 1வது எதிரி சொன்னதன்பேரில்தான் 2 வது எதிரி 1வது எதிரியின் காலனியில் குடியிருப்பதாக தெரிந்துக்கொண்டேன். 2 வது எதிரியை 1வது எதிரி அழைத்து வந்து அறிமுகம் செய்து வைத்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எந்த காலகட்டத்திலும் அ.த.சா.ஆ.3 2 வது எதிரியால் ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அதிலுள்ள கையெழுத்து 2 வது எதிரியின் கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்தது 1வது எதிரியிடம் மட்டுமே என்றால் சரிதான். அ.தசா.ஆ.3-ல் 2 வது எதிரியும் பணம் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது தவறு என்றால் 1வது எதிரி சொன்னதன்படிதான் 2 வது எதிரி எழுதி கொடுத்தார். 2 வது எதிரியிடம் பணம் கொடுக்காமலேயே அ.த.சா.ஆ.3 மோசடியாக உற்பத்தி செய்ப்பட்டதால்தான் நான் முன்னுக்குபின் முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.3 யாரால் எழுதப்பட்டது என்றால் 1வது எதிரி சொல்ல, சொல்ல என் தம்பி தாசன் எழுதினார். அ.த.சா.ஆ.3 ஆவணம் புகார் கொடுத்தபோது போலிசில் கொடுக்கப்பட்டதா என்றால் என்னிடம் இருந்தது, அப்போது கொடுக்கவில்லை. மறுமுறை என்னை விசாரித்தபோது அ.த.சா.ஆ.3 அசல் ஆவணத்தை கொடுத்தேன். அ.த.சா.ஆ.3 புகாருக்கு ஏற்ப மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டதால்தான் போலிசிடம் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் முதன்முறை கொடுத்த புகாரில் 2 வது எதிரியை சம்பந்தப்படுத்தவில்லை என்றால் சரிதான். 2 வது எதிரி அரசு ஊழியர் என்பதால் அவரை தரப்பினராக சேர்த்தால்தான் பணம் பெற முடியும் என்று கூறப்பட்டதால்

போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க 2வது எதிரியை சம்பந்தப்படுத்தி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2017ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலே 1வது எதிரியின் குடும்பத்திற்கும் 2வது எதிரியின் குடும்பத்திற்கும் பணம் கொடுக்கல், வாங்கல் தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டு பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2வது எதிரியை சம்பந்தப்படுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2020-ம் ஆண்டு நவம்பர் மாதம் 03-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 2 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தாசன் | வயது | |
| தகப்பனார் பெயர் | பக்கிரிசாமி | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் கடுவன்குடி காலனி தெருவில் வசித்து வந்து சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனக்கு அண்ணன் முறை ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். திருவாரூர் துர்காலயா ரோட்டில் உள்ள வேலுடையார் பள்ளியில் என் அண்ணான அ.சா.1ன் குழந்தைகள் படித்து வருகிறார்கள். 1வது எதிரி சக்திவேல் மேற்படி துர்காலாயா ரோட்டில் இயற்கை அங்காடி நடத்தி வருகிறார். அ.சா.1 1வது எதிரியின் கடைக்கு பொருள் வாங்க சென்றதன் மூலம் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. 1வது எதிரி சக்திவேல் அ.சா.1னிடம் விசாரித்தவகையில் அ.சா.1 விவசாய வேலை செய்து வருவதாக கூறியதால் திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம், சென்னை ஆகிய இடங்களில் நீதிமன்றத்தில் உதவியாளர் வேலை இருப்பதாகவும், அதை வாங்கி தருவதாகவும் அரசு வேலை என்றும் அ.சா.1னிடம் சொன்னதாக அ.சா.1 என்னிடம் சொன்னார். நான் அப்போது சென்னையில் இருந்தேன். எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். அப்போது என்னுடன் எனது மற்றொரு அண்ணன் அழகரும் சென்னையில் இருந்தார். மேற்படி வேலைக்காக ரூ.2 1/2 லட்சம் தொகை என்றும், முன்பணமாக ரூ.1,00,000 தருமாறும் 1வது எதிரி சக்திவேல் சொன்னதாக என் அண்ணன் என்னிடம் சொன்னார். பின்பு இந்த விபரத்தை நான் சக்திவேல், தர்மராஜ், சுரேஷ், தினேஷ் ஆகியோர்களுக்கு நான் சொன்னேன். அ.சா.1ஐ சேர்த்து

7 நபர்களுக்கு மொத்தம் ரூ.7 லட்சத்தை திருவாரூர் சென்று துர்காலாயா ரோட்டில் உள்ள 1வது எதிரியின் வீட்டிற்கு சென்று அவரது வீட்டில் வைத்து 13.02.2018ம் தேதியில் கொடுத்தோம். பணம் கொடுத்தபோது எங்களது பயோ டேட்டா மற்றும் போட்டோ, ஆதார் கார்டு நகல் ஆகியவற்றை சேர்த்து கொடுத்தோம். அப்போது 1வது எதிரி சக்திவேல் ஒரு மாதத்தில் வேலை வந்துவிடும் என்று உறுதியளித்தார். ஆனால் பேசியபடி 1வது எதிரி வேலை வாங்கி தரவில்லை என்பதால் நானும், அ.சா.1 சுரேஷ்சும் 1வது எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்று கேட்டோம். அதற்கு 1வது எதிரி சக்திவேல் மே மாதம் கோர்ட் லிவு என்பதால் ஜுன், ஜூலையில் வேலை கிடைத்துவிடும் என்றார். ஜுன், ஜூலையிலும் வேலை கிடைக்கவில்லை என்பதால் மீண்டும் சென்று 1வது எதிரியிடம் கேட்டோம். அதற்கு 1வது எதிரி சக்திவேல் ஜனவரியில் கிடைத்துவிடும் என்று சொன்னார். மீண்டும் வேலை கிடைக்கவில்லை என்பதால் 1வது எதிரி சக்திவேலிடம் சென்று கேட்டோம். அதற்கு அவர் திருவாரூர் கோர்ட்டில் வேலை பார்க்கும் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் பணத்தை கொடுத்துவிட்டதாக சொன்னார். நாங்கள் 1வது எதிரி சக்திவேல் வீட்டில் இருந்து போன் மூலம் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை தொடர்பு கொண்டோம். கோவிந்தலெட்சுமி எங்களிடம் உங்கள் பணம் என்னிடம்தான் உள்ளது, 2019 ஏப்ரல் மாதத்திற்குள் வேலைக்கான உத்தரவு வந்துவிடும் என்று சொன்னார். இது தொடர்பாக என் அண்ணன் திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்தார். நீதிமன்ற வேலைக்காக நான், என் அண்ணன் சுரேஷ், அழகர், தினேஷ், சுரேஷ், தர்மராஜ் ஆகியோர் பணம் கொடுத்து ஏமாந்துவிட்டதாக 1வது எதிரி சக்திவேல் மீது புகார் கொடுத்தார். அதன்பிறகு டி.சி.பி. போலிசார் எங்களை அழைத்து விசாரித்தார்கள். நாங்கள் நடந்த விபரத்தை சொன்னோம்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

எதிரி ஆஜரில் இருந்தும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் நீதிமன்றம் கேட்டுக்கொண்டும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை என்பதால் குறுக்குவிசாரணை முடிக்கப்படுகிறது.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

செல்போனில் பேசியது 2 வது எதிரி கோவிந்தலெட்சுமிதான் என்று 1வது எதிரி சொன்னதால்தான் தெரியும் என்றால் சரிதான். என்னிடம் போனில் பேசியது கோவிந்தலெட்சுமி அல்ல என்றால் சரியல்ல. 1வது எதிரி குடும்பத்திற்கும் 2 வது எதிரி குடும்பத்திற்கும் நடந்த கொடுக்கல், வாங்கல் பிரச்சனை சம்பந்தமான வன்மத்தில் 1வது எதிரி 2 வது எதிரியின் பெயரை தவறாக பயன்படுத்தியுள்ளார் என்றால் 1வது எதிரிக்கு சொந்தமான வீட்டில்தான் 2 வது எதிரி குடியிருந்து வருகிறார். 2 வது எதிரி 1வது எதிரிக்கு சொந்தமான வீட்டில் எந்த காலகட்டத்திலும் வசிக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக இந்த விபரத்தை தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரியின் பெயரை 1வது எதிரி வன்மத்தில் தவறாக பயன்படுத்தியுள்ளார் என்ற விபரம் தெரிந்துதான் 1வது எதிரி மீது மட்டுமே என் அண்ணன் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2020-ம் ஆண்டு நவம்பர் மாதம் 03-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 3 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அழகர் | வயது | |
| தகப்பனார் பெயர் | பக்கிரிசாமி | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் கடுவன்குடி காலனி தெருவில் வசித்து வந்து சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் அண்ணன் ஆவார். அ.சா.2 என் தம்பி ஆவார். ஆஜர் எதிரிகள் சக்திவேல் மற்றும் கோவிந்தலெட்சுமியை தெரியும். 13.02.2018 ம் தேதியன்று நான் சென்னையில் இருந்தபோது என் அண்ணன் சுரேஷ் எனக்கு போன் செய்து என் நண்பர் சக்திவேல் என்பவர் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாகவும், அதற்காக ரூ.2 1/2 லட்சம் தொகை ஆகும் என்றும், முன்பணமாக ரூ.1,00,000 கொடுக்க வேண்டும் என்றும் , நீ தனியார் நிறுவனத்தில் வேலை செய்வதால் கோர்ட் வேலை கிடைத்துவிட்டால் உன்னுடைய லைப் செட்டிலாகிவிடும் என்றும் கூறினார். நான் சென்னையில் இருந்து 13.02.2018 ம் தேதி வரும்போதே அன்றைய தினமே இரவு ரூ.1,00,000 தரவேண்டும் என்றும் என் அண்ணன் அ.சா.1 சுரேஷ் என்னிடம் கூறினார். இந்த தகவலை என் மனைவியிடம் சொல்லி வீட்டில் இருந்த நகைகளை அடகு வைத்து பணம் ஏற்பாடு செய்யுமாறு கூறினேன். என் மனைவியும் நகைகளை அடகு வைத்து பணம் வைத்திருந்தார். நான் சென்னையிலிருந்து வரும்போதே என் அண்ணன் போனில் மேற்படி வேலை திருவாரூர், கும்பகோணம், மன்னார்குடி, நீடாமங்கலம் ஆகிய ஊர்களில் உள்ள நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாகவும், உனக்கு வேண்டியவர்கள் யாராவது இருந்தால் அவர்களுக்கும் வேலை வாங்கி

கொடுக்கலாம் என்று கூறினார். அதனால் நான் என் நண்பர் சுரேஷ், சக்திவேல், தர்மராஜ், தினேஷ் ஆகிய 4 பேர்களுக்கும் வேலையை பற்றி போன் மூலம் தகவல் சொன்னேன். எனது நண்பர்களும் வேலைக்காக தலா ரூ.1 லட்சம் தயார் செய்துக்கொண்டார்கள். பிறகு என் அண்ணன் சுரேஷ் 1வது எதிரி சக்திவேலிடம் கேட்டு வேலைக்காக பணத்துடன் கல்வி சம்பந்தமான சான்றுகளும், பயோ டேட்டாவும் வேண்டும் என்று கூறினார். அதனால் 13.02.2018 ம் தேதியன்று நானும், என் அண்ணன் அ.சா.1 சுரேஷ்சும், என் தம்பி தாசனும், என் நண்பர்களான ஆர்.சுரேஷ், தினேஷ், தர்மராஜ், சக்திவேல் ஆகிய 7 பேரும் திருவாரூர் துர்க்காலாய ரோட்டில் உள்ள 1ம் எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்று அவர், அவரது அம்மா, அவரது மனைவி ஆகியோர்கள் முன்னிலையிலேயே நாங்கள் 7 பேரும் தலா ரூ.1,00,000 வீதம் மொத்தம் ரூ.7 லட்சத்தை 1வது எதிரி சக்திவேலிடம் கொடுத்தோம். அன்றிரவே நான் சென்னை சென்றுவிட்டேன். ஆனால் எனக்கு நீதிமன்றத்தில் வேலை எதுவும் கிடைக்கவில்லை. இரண்டு, மூன்று நாட்களில் ஆர்டர் காப்பி வந்துவிடும் என்று 1வது எதிரி சக்திவேல் கூறியதால் நான் சென்னை சென்றபிறகு மூன்று நாட்கள் கழித்து அ.சா.1னிடம் போன் மூலம் கேட்டேன். அதற்கு அ.சா.1 1வது எதிரி சக்திவேல் வேலை கிடைப்பதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகிறது என்றும், வேலை போடும்போது கண்டிப்பாக வாங்கி தருகிறேன் என்றும் சொன்னதாக என்னிடம் சொன்னார். வேலை வாங்கி தருவது சம்பந்தமாக என் அண்ணனுக்கும் 1ம் எதிரி சக்திவேலுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதை அ.சா.1 எனக்கு போன் மூலம் சொன்னார். நீ சென்னையிலிருந்து வா, நாம் சென்று எதிரி சக்திவேலிடம் ரூ.7 லட்சத்திற்கு எழுதி வாங்கி கொள்ளலாம் என்று கூறினார். 1வது எதிரியும் எழுதி தருவதாக அ.சா.1னிடம் ஒப்புக்கொண்டிருந்தார். அதனால் 04.02.2019 ம் தேதியன்று நான் சென்னையிலிருந்து திருவாரூருக்கு வந்துவிட்டேன். பிறகு 1வது எதிரியின் வீட்டிற்கு சென்று கேட்டோம். அப்போது அவர் எங்களிடம் எங்களிடமிருந்து வாங்கிய பணத்தை 2வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்திருப்பதாகவும், மேற்படி பணத்திற்காக இருவரும் சேர்ந்து பத்திரம் எழுதி தருவதாக கூறினார். அதன்படி 04.02.2019 ம் தேதியன்று 1வது எதிரி சக்திவேலும், 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியும் சேர்ந்து பணத்திற்கு இருவரும் உத்தரவாதம் என்றும், வேலை வரவில்லை என்றால் பணத்தை திருப்பி தருவதாகவும், அதற்கு 2 சதவீதம் வட்டி சேர்த்து தருவதாகவும் கூறினார்கள். அவர்கள் கூறிய விபரத்தை தாசன் 20 ரூபாய் பத்திரத்தில் எழுதினார். அதில் 1வது

எதிரி சக்திவேலும், 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியும் கையொப்பம் செய்தார்கள். அதன்பிறகும் வேலையும் வாங்கி கொடுக்கவில்லை, பணமும் கொடுக்கவில்லை. என்னை வைத்து பணம் கொடுத்ததால் என் நண்பர்கள் என் வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்ய ஆரம்பித்தார்கள். அதன்பிறகு ஒரு நாள் எனது நண்பர் சுரேஷ்சை தவிர நாங்கள் ஆறு பேரும் 1வது எதிரி சக்திவேலின் வீட்டிற்கு சென்று பணம் கொடுத்த அனைவருக்கும் தனித்தனியாக பத்திரம் எழுதி கொடுக்கும்படி கேட்டோம். 1வது எதிரி அவ்வாறு பத்திரம் எழுதி கொடுத்தார். அதன்பிறகும் எதிரிகள் எங்களுக்கு வேலை வாங்கி தரவில்லை. பணம் தொடர்பாக என் அண்ணன் எதிரி சக்திவேலிடம் அடிக்கடி கேட்டுவந்த நிலையில் எதிரி சக்திவேல் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி மீது நீதிமன்றத்தில் புகார் கொடுத்துள்ளார். மேற்படி பணத்தை எதிரி சக்திவேல் வேலை வாங்கி தருவதற்காக கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்திருந்ததால் அவர் அவ்வாறு வேலை வாங்கி தராததால் அவர் மீது புகார் கொடுத்திருந்தார். பிறகு என் அண்ணன் அ.சா.1 திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் எதிரி சக்திவேல் மற்றும் கோவிந்தலெட்சுமி மீது புகார் கொடுத்திருந்தார். இது சம்பந்தமாக டி.சி.பி. போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் 01.03.2019 ம் தேதிய பத்திரம் 1 வது எதிரி சக்திவேல் என் பெயருக்கு எழுதி கொடுத்ததுதான். அதில் சுரேஷ் மற்றும் தினேஷ் ஆகியோர்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள். அந்த பத்திரம் **அ.த.சா.ஆ. 4** ஆகும்.

**கு.வி. (1 வது எதிரி தரப்பில்)**

எதிரி ஆஜரில் இருந்தும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் நீதிமன்றம் கேட்டுக்கொண்டும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை என்பதால் குறுக்குவிசாரணை முடிக்கப்படுகிறது.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

2 வது எதிரி உத்தரவாத பத்திரத்தில் கையொப்பம் செய்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால்சரியல்ல. 2 வது எதிரி என் முன்பாக எந்த கையொப்பமும் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க 2 வது எதிரியை தெரியும் என்றும், அடையாளம் காண்பித்தும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரி மீது 1 வது எதிரி நீதிமன்றத்தில் புகார் கொடுத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா

என்றால் தெரியாது. போலிசார் விசாரணையில் மேற்படி 1வது எதிரி 2 வது எதிரியின் மீது நீதிமன்றத்தில் புகார் கொடுத்த விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரியின் குடும்பத்திற்கும், 2 வது எதிரியின் குடும்பத்திற்கும் இருந்த விரோதத்தால் 1வது எதிரி 2 வது எதிரியின் பெயரை தவறாக பயன்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல.